1993 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தப்பட்ட அந்த விளையாட்டு நிகழ்ச்சி நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. 1989–90ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த விளையாட்டு போட்டிகள் தேவையில்லை என்று நிறுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். இதற்கு பிறகு எதிர்காலத்தில் நீங்கள் சொல்கிற சிறப்பு விருதுகளைப் பெறுவதற்கு இந்தப் போக்குவரத்துத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 456, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. உங்களுடைய கேள்வி வருகிற போது நீங்கள் இருக்கையில் இருக்கவேண்டும். திரும்ப வந்து வேண்டுகோள் வைப்பது என்பதை எல்லா நேரத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

456—

பாலாறு—பொருந்தலாறு அணையிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை.

*9681—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பாலாறு—பொருந்தலாறு அணையில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை தற்போது செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் உற்பத்தியை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலத்தடி நீர் கிடைக்காததால், பொரந்தலாறு ஆற்றிலிருந்து நீர் வசதி ஏற்படுத்தியவுடன் மீண்டும் மீன் குஞ்சு உற்பத்தி தொடங்கப்படும்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, பழனி வட்டம் பாலாறு-பொரந்தலாறு அணை என்பது அந்த வட்டத்தில் மிகப்பெரிய அணையாக இருக்கிறது. அங்கே தமிழக அரசால் நிர்வகிக்கப்பட்டு வரும் அந்த மீன் பண்ணையில் நீர்வரத்துப் பற்றாக்குறை காரணமாக அந்த மீன் பண்ணையினுடைய செயல்பாடு நிறுத்தப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, அருள்கூர்ந்து அங்கே நீர்வரத்தைப் பெருக்கி, அந்த மீன் பண்ணையை விரைவில் செயல்படச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பண்ணைக்கு தேவைப்படுகிற தண்ணீர் பொரந்தலாறு ஆற்றிலிருந்து எடுத்துக்கொள்ள நீர்ப்பாசனத் துறை தலைமைப் பொறியாளரிடமிருந்து அனுமதி கேட்கப்பட்டுள்ளது. விரைவாக அனுமதி பெற்றிட மீன்துறையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மீன் பண்ணையில் என்னென்ன வகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன? இந்தப் பண்ணையை மேலும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவாக வளரக்கூடிய சாதா கெண்டை, சுருள் கெண்டை மற்றும் மிர்கால், கட்லா, ரோக் போன்ற மீன் குஞ்சுகள் அங்கு வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு சிறப்பான முறையிலே மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டவுடன், அதனை விரிவாக்கம் செய்யும் பணி அரசினுடைய ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS